Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 213

செவ்வாய்க்கிழமை 27 ஜூன் 2023

ஆனி 12 ஆம் நாள் – ... 054





## நலன்புரி உதவியில் வெட்டு; நாடெங்கும் போராட்டங்கள்!

### வவுனியாவில் நேற்றுப் பதற்றம்

**வவுனியா, ஜூன் 27**

**அரசாங்கத்தின் நலன்புரி உதவித்திட்டப் பதிவுகளில் முறைகேடு எனத் தெரிவித்து நாடெங்கிலும் நாளுக்கு நாள் போராட்டங்கள் தீவிரமாகி வருகின்றன. வவுனியாவில் பிரதான வீதிகளை முடக்கி மூன்று இடங்களில் நேற்று நடத்தப்பட்ட போராட்டங்களால் பதற்றநிலை ஏற்பட்டது.** »11

அரசின் நலன்புரித் திட்டம்

## ஜூலை 10 வரையில் மேன்முறையிடலாம்!

பிரதமர் தினேஷ் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 27
அரசாங்கத்தின் நலன்புரித் திட்டங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட பயனர்களின் விவ »11

## சீனாவுக்குக் குரங்குகள் ஏற்றுமதி செய்யப்படா!

கொழும்பு, ஜூன் 27
இலங்கையிலிருந்து சீனாவுக்குக் குரங்குகள் ஏற்றுமதி செய்யப்படமாட்டாது என்று »09

2022ஆம் ஆண்டில்

## 20,000 கிலோ

## போதைப்பொருள் மீட்பு!

152,729 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 27
2022ஆம் ஆண்டு போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக ஒரு லட்சத்து 52 ஆயிரத்து 729 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹெரோய்ன், கஞ்சா, ஐஸ் என »09

## அமைச்சர்களின் மௌனத்தால் கடும் கவலையில் ஜனாதிபதி!

கொழும்பு, ஜூன் 27
பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் »11

யாழ்ப்பாணப் பல்கலையில்

## துணைவேந்தர் தெரிவுக்கான பேரவை அமர்வு ஜூலை 12 இல்!






யாழ்., ஜூன் 27
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்துள்ள நால்வரில், மூவரைத் திறமைப் புள்ளி ஒழுங்கில் தெரிவு செய்வதற்கான »11

வனவள, வன உயிரிகள்

## திணைக்களங்களின் பிடியிலுள்ள காணிகளை விடுவிக்க ஒப்புதல்!

யாழ்ப்பாணம், ஜூன் 27
வனவளப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் ஆகியவற்றால் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக வர்த்தமானி ஊடாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள மக்களின் குடியிருப்புக்களும் விவசாயம், நீர்வேளாண்மை மற்றும் »09

## எரிவாயு விலை மேலும் குறைப்பு

கொழும்பு, ஜூன் 27
லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலையை மேலும் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத் தலைவர் நேற்றுத் தெரிவித்துள்ளார். »11

## ராஜபக்சக்களை தூக்கிலிடுங்கள்!



பொன்சேகா வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 27
இலங்கையை அழித்து நாசமாக்கியது ராஜபக்சக்களே. அவர்களைக் கூண்டோடு மக்கள் முன்னிலையில் தூக்கிலிட வேண்டும் - இவ்வாறு வலியுறுத்தினார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற »11

முல்லை. பாரதி மகா வித்தியாலய

## எல்லே அணி தகுதிநீக்கம்; மாணவர்கள் போராட்டம்!

முல்லைத்தீவு, ஜூன் 27
முல்லைத்தீவு வலயமட்ட அரை இறுதி எல்லேப் போட்டியில் இருந்து மாணவர் ஒருவரின் ஒழுக்கத்தைக் காரணமாகக்கூறி (பச்சை குத்தியதை) பாரதி மகா வித்தியாலய அணியைத் தகுதி நீக்கம் செய்தமைக்கு எதிராக »11

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ.120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் தங்கக்கடன்
செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தேரர்கள் சொல்வதை கேட்கின்றார்கள் இல்லை

## இதனாலேயே தமிழருக்கு வீண் அச்சம் கவலைப்படுகிறாராம் விதுர விக்கிரமநாயக்க



**கொழும்பு, ஜூன் 27**

**தேரர்கள் தொல்லியல் விவகாரத்தில் தலையிடுவதை நிறுத்த வேண்டும். அவர்களது செயற்பாடுகளாலேயே வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள மக்களுக்கு காணி அபகரிப்புக் குறித்து வீண் அச்சம் ஏற்படுகிறது. தேரர்களிடம் பல சந்தர்ப்பங்களில் இதை நேரடியாகத் தெரிவித்துள்ளபோதிலும், அவர்கள் அதனை ஏற்க முன்வரவில்லை - இவ்வாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: தொல்பொருள் கட்டளைச்சட்டம் இன்றும் நடைமுறையிலுள்ளது. அதனை அனைவரும் பின்பற்ற வேண்டும். இந்த விவகாரத்தில் தேரர்களும், அரசியல்வாதிகளும் தலையிடுவதை நிறுத்தவேண்டும். அதனை விடுத்து தொல்பொருள் திணைக்களம் ஆய்வுகளை முன்னெடுக்கும் பகுதிகளுக்குச் சென்று அங்கு சில தேரர்களால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் காரணமாக வீண் பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன.

இந்து ஆலயங்களை அழிப்பதற்கோ, தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதற்கோ எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் மாத்திரமே அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் இலாபத்தை ஈட்ட முயற்சிக்காமல் மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்க வடக்கு, கிழக்கு அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ஒ-இ)

## மாணவனுக்குக் காயம்

சாவகச்சேரி, ஜூன் 27

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதியைக் கடந்த மாணவனை மோதியது. காயமடைந்த தரம் - 7 இல் கல்வி பயிலும் மாணவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக நேற்று இடம்பெற்றுள்ளது. (ஒ-9)

## நிபந்தனைக்கு உடன்பட்டாலே கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவு

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 27

சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் எதிர்வரும் முதலாம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்துக்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்காது என அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஸ டி சில்வா தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கம் கடனைக் குறைக்கும் நடவடிக்கைக்குச் சென்றால் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை நாங்கள் ஆதரிக்கமாட்டோம். வைப்புச் செய்தவர்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறோம். ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றின் மீது அரசாங்கம் கை வைக்கக்கூடாது என்று ஏற்கனவே கூறியுள்ளோம். நாங்கள் வரைந்த கோட்டுக்கு அரசாங்கம் உடன்பட்டால் மாத்திரமே நாங்கள் வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிப்போம்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை எதிர்வரும் 28 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பித்து, மறுநாள் பொது நிதிக் குழுவுக்குப் பரிந்துரைத்து, எதிர்வரும் சனிக்கிழமையன்று நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெறுவதற்கான திட்டங்களை எதிர்க்கட்சிகள் கேட்டிருந்தன. அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்று கூடி முன்னேற்றம் தொடர்பாக விவாதிக்கும் - என்றார். (எ-இ)

## யானை தாக்கி இளைஞன் சாவு!

கொழும்பு, ஜூன் 27

காட்டு யானை தாக்கி 27 வயதுடைய இளைஞர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் மதவாச்சியில் நேற்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இளைஞர் வயலுக்குச் சென்ற போதே யானையின் தாக்குதலுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார். (ஒ-22)

## கொழும்பு விபத்தில் தமிழ் வர்த்தகர் பலி!

கொழும்பு, ஜூன் 27

கொழும்பில் இடம்பெற்ற வாகன விபத்தில் தமிழ் வர்த்தகர் உயிரிழந்துள்ளார். அவரின் மனைவி படுகாயமடைந்துள்ளார். கொழும்பு, இரத்மலானையில் நேற்றுக் காலை 8 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. திருகோணமலையைச் சேர்ந்தவரும் இரத்மலானையில் வசிப்பவருமான பாரதிராஜா முகுந்தன் (வயது - 44) என்ற வர்த்தகரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

தனது வர்த்தக நிலையத்துக்கு மனைவியை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு பயணித்துள்ளார். எதிரே வந்த ஹைஏஸ் வாகனம் மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் வர்த்தகர் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார். அவரின் மனைவி படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-22)

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை கேலிக்குள்ளாக்கும் கல்வித்திணைக்களம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் தகவல் கோரி விண்ணப்பித்தவரிடம் கிராமஅலுவலர் ஊடக வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணம், வாக்காளர் இடாப்பில் பிரித்தெடுக்கப்பட்ட பகுதி மற்றும் பிரதேச பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் வழங்கப்படும் உரிய சான்றுப் பத்திரம் ஆகியவற்றை வழங்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையிலிருந்தபோது மு.இராதாகிருஷ்ணன் கோரியுள்ளார்.

a) உரிய பிரதேச கிராம சேவையாளரிடமிருந்து பெறப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணம்.
b) வாக்காளர் இடாப்பில் பிரித்தெடுத்த பகுதி.
c) உரிய பிரதேச பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் வழங்கப்பட்ட உரிய சான்றுப்பத்திரம்.

குறித்தளிக்கப்பட்ட தகவல் அலுவலர்.
மு.இராதாகிருஸ்ணன்,
வலயக்கல்விப் பணிப்பாளர்.

யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக்கல்லூரி தொடர்பான சில தகவல்களை ஒருவர் கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக யாழ். வலயக் கல்விப் பணிமனையில் கோரியுள்ளார். இதற்கு வலயக் கல்விப் பணிமனையின் தகவல் அலுவலருக்குப் பதிலாகக் குறித்தளிக்கப்பட்ட அலுவலரான யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் கையெழுத்திட்டு பதில் அனுப்பியுள்ளார்.

அதில், கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர், தகவல் கோரியவரின் கிராம அலுவலர் ஊடக வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணம், வாக்காளர் இடாப்பில் பிரித்தெடுக்கப்பட்ட பகுதி மற்றும் பிரதேச பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் வழங்கப்படும் உரிய சான்றுப் பத்திரம் ஆகியவற்றை தனக்குச் சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் கோரியுள்ளார். கொக்குவில் இந்துக்கல்லூரி தொடர்பான தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற விரும்பின் கேட்கப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பித்துத் தகவல்களை கோருமாறு குறிப்பிட்டுள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்து 6 ஆண்டுகள் முடிவடையும் நிலையில் சட்டம் தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளருக்கோ, பாடசாலை அதிபருக்கோ அது தொடர்பில் விளக்கமில்லாமல் இருப்பதையே இந்தப் பதிலிலிருந்து தெரியவருகின்றது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பாகம் ஐந்தில், தகவல் அலுவலர்களின் நியமனமும் தகவலுக்கு அணுக்கம் பெறுவதற்கான நடவடிக்கை முறையும் என்ற தலைப்பில் 24 (5) (ஈ) என்னும் உட்பிரிவில், அவரைத் (தகவல் கோரிக்கையாளரை) தொடர்புகொள்வதற்கு அவசியமாகவிருக்கக்கூடிய தகவல் தவிர, தகவல் தேவைப்படுவதற்கான ஏதேனும் காரணம் அல்லது வேறு ஏதேனும் தனிப்பட்ட விவரங்களை கொடுக்கும்படி தேவைப்படுத்தல் ஆகாது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை ஊடாக இலங்கை இராணுவத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக்கு, கோரிக்கையாளரின் தேசிய அடையாள அட்டையை கிராமஅலுவலர், பிரதேச செயலகத்திடம் உறுதிப்படுத்தி அனுப்புமாறு இராணுவம் கோரியதை தகவல் கோரிக்கையாளர் தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்து சவாலுக்கு உட்படுத்தியிருந்தார். அதன்போதான விசாரணையில், அவ்வாறு கோரக்கூடாது என்று ஆணைக்குழு இராணுவத்துக்குப் பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

# இந்தியா தேவையில்லை ரணிலுடன் பேசித் தீர்வு



## சிங்கள ஊடகத்துக்கு சுமந்திரன் தகவல்

கொழும்பு, ஜூன் 27

**எமது பிரச்சினைக்கான தீர்வைத்தேடி நாம் இந்தியா செல்லவேண்டிய தேவை இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசித் தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம் என்று நாம் நம்புகின்றோம் - இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எதிர்வரும் ஜூலை மாதம் வரை பொறுமையாக இருக்குமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதி வழங்கியுள்ளார். தமிழர் பிரச்சினைக்கான தீர்வாக ஜனாதிபதியிடம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. அது தொடர்பில் ஆராய்ந்து ஜூலை மாதத்தின் பின் உரிய நடவடிக்கை எடுப்பதற்கே ஜனாதிபதி இவ்வாறு கால அவகாசம் விதித்துள்ளார். அதுவரை நாம் பொறுமையுடன் காத்திருக்கின்றோம் - என்றார். (ஒ-22)

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 27

குருநகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிர்கொல்லி ஹெரோய்னை வைத்திருந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படைக்குக் கிடைத்த இரகசியத்தகவலுக்கமையவே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரைச் சோதனைக்கு உட்படுத்தியபோது 7 கிராம் 5மில்லி கிராம் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்தார்.

மேலதிக விசாரணைகளுக்காக யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் இளைஞரையும் மீட்கப்பட்ட போதைப்பொருளையும்பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர். (ஒ-ரி3,20)

## மோ.வாகனம் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 27

கொக்குவில் பொற்பதி பகுதியில் வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனம் ஒன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு திருடப்பட்டுள்ளதாகத் தெரிவித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஒ-ரி2, 125)



## வெளியாருக்குக் காணி வழங்க பொன்நகர் மக்கள் எதிர்ப்பு

கிளிநொச்சி, ஜூன் 27

கிளிநொச்சி, பொன்நகரில் உள்ள காணிகளை அரச அதிகாரிகள் தன்னிச்சையாக முடிவெடுத்து தங்களுக்கு விரும்பியவர்களுக்குக் காணிகளை வழங்குகின்றனர் என்று அந்தப் பகுதியில் வாழும் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், கரைச்சிப் பிரதேசசெயலாளர் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றையும் முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரனுக்கான மனு ஒன்றை மேலதிக மாவட்டச் செயலர் சிறிமோகனிடம் கையளித்தனர்.

பொன்நகர் பகுதியில் உள்ள காணிகளை அரச தேவை கருதியே பயன்படுத்தமுடியும் என்றும் தனி நபருக்கோ அல்லது வெளிமாவட்டங்களில் இருந்து வருபவர்களுக்கோ விற்பனை செய்யக்கூடாது என்று அவர்கள் வலியுறுத்தினார்கள்.

தங்கள் பகுதி கிராமஅலுவலர் தன்னிச்சையாகச் சிலருக்கு காணி ஆவணம் பெற்று வழங்கியுள்ளார் என்றும், தங்களது பகுதியில் வசிக்கும் பலர் காணிகள் இன்றி வாழ்கின்றனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (எ-113)

வெறுப்பேற்றி மதக் கலவரம் தூண்டும் போதகர் ஜெரோம் பயங்கரவாதி, சிறையில் அடை எனக் கோரி திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் இலங்கை சிவசேனை அமைப்பினரால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (ஒ-66)







ஒருபானை சோத்துக்கு ஒரு சோறு பதம் எண்டு சொல்லுறது எல்லாத்துக்கும் பொருந்தாது. ஒராள் பிழை விட்டால் அதை வைச்சு எல்லாரும் பிழைகாரர் எண்டு சொல்லேலாது தான். அப்பிடி ஒரு சம்பவம் கிட்டடியில முல்லைத்தீவில நடந்திருக்கு. (அதைப்பற்றின செய்தியொண்டும் இண்டைக்கு பேப்பரில வந்திருக்கு) அங்க வலய மட்டத்தில எல்லேப் போட்டி நடந்திருக்கு. இதுவரைக்கும் அந்த வலயத்தில இருந்த எல்லே 'ரெக்கோர்ட்' எல்லாத்தையும் முதல் ரண்டு மச்சிலயும் முறியடிச்ச பாரதி வித்தியாலயமும், வித்தியானந்தாக் கல்லூரியும் செமிபைனல்ல விளையாடினவை.

முதல்ல வித்தியானந்தாக் கல்லூரி ரீம், 30 பந்தில 5 ரன் அடிச்சவை. பாரதி வித்தியாலயம் 6 ரன் அடிச்சால் வெற்றி. ஏற்கனவே 13 ரன்னெல்லாம் அடிச்சு வெண்டுவந்த அந்த ரீமுக்கு இது பெரிய ஸ்கோர் இல்லை. முதல் 10 பந்திலேயே பாரதி ரீம் 5 அடிச்சிட்டுது. இன்னும் 20 பந்தில ஒரு ரன் அடிச்சால் அந்த ரீம் பைனலுக்கும் போடும் எண்ட நிலைமை. ஆனால் அப்பதான் வில்லங்கம் தன்ர வேலையக் காட்டிச்சுது. புதுசா கிரவுண்டுக்க இறங்கின பாரதி வித்தியாலய மாணவன் ஒருத்தன், கையில பச்சை குத்தியிருந்திருக்கிறான். உடனேயே அவனை கிரவுண்டை விட்டு வெளியில போகச் சொல்லிட்டினம். சரி, பச்சை குத்தினது பிழையெண்டால் அந்த மாணவனை வெளியில அனுப்பிட்டு, மிச்ச ஆக்களை விளையாட விடுறதுதானே முறை? வயசை மாத்தியோ, இல்லாட்டி பள்ளிக்கூடத்தில படிக்காத வெளியாளைக் கொண்டந்தோ ஏமாத்தி விளையாடேலைத் தானே? அதோட பச்சை குத்துறது குற்றமெண்டோ, பச்சை குத்தினால் எல்லே விளையாடக் கூடாதெண்டோ இதுவரை எழுத்து ரீதியா எந்த ரூல்ஸூம் இல்லை. ஆனாலும் பள்ளிக்கூடப் பெடியன் எண்டவகையில, இந்த வயசில, ஒரு மாணவன் கையில பச்சை குத்துறதை எங்கட சமூகம் ஒரு பிழையான செயலாத்தான் பாக்கும். பள்ளிக்கூட மாணவன் எண்டா எப்பிடி உடுப்பு போடோணும், எப்பிடி நடக்க வேணும், தலைமுடி எப்பிடி வெட்ட வேணும் எண்டு சில டிஸிப்பிளின் இருக்கு. இதுகள எழுதப்படாத சட்டமா பள்ளிக்கூடங்கள் பின்பற்றுது. அப்பிடிப் பார்த்து, இந்தப் போட்டியை நடத்தினவை அந்தப் பச்சை குத்தின பெடியனை மட்டும் கிரவுண்டை விட்டு வெளியில அனுப்பியிருந்தால் அதில ஒரு நியாயம் இருக்கு. ஆனால் ஒரு பெடியன் பச்சை குத்தி இருந்ததால அந்தப் பள்ளிகூட ரீமையே கிரவுண்டை விட்டு வெளியிலபோகச் சொல்லி, அவையை தகுதிநீக்கமும் செய்து போட்டினம்.

பச்சை குத்தின ஆக்கள் விளையாடக் கூடாது எண்ட மாதிரிக் கட்டுப்பாடுகளை கண்காணிக்கிறதில வலயக்காரர் இறுக்கமா இருந்திருந்தால், போட்டி தொடங்க முதலே ரண்டு ரீம் காரரையும் 'செக்' பண்ணிப் போட்டுத்தான் உள்ளுக்க விட்டிருக்க வேணும். ஏனெண்டால், வித்தியானந்தா ரீம் விளையாடேக்க இந்தப் பச்சைகுத்தின பெடியன் பீல்டிங் செய்து கொண்டுதான் இருந்தவன். அப்ப அம்பயர்மார் அணிலேற விட்டிட்டு, அந்த ரீம் வெல்லப்போகுது எண்ட கட்டத்தில பச்சையைக் காட்டி, அந்த ரீமையே விளையாடவிடாமல் கலைச்சது எச்சைத்தனம் தானே? ஒருவேளை இந்தப் பள்ளிக்கூடம் வெல்லக்கூடாது எண்டதுக்காகவே இப்பிடி ஒரு சாட்டைக் கண்டுபிடிச்சினமோ எண்டும் சந்தேகப்பட வேண்டியிருக்கு.

அந்தப் பெடியன் பச்சை குத்தினதை முதல் காணாமல் சிலவேளை பிறகுதான் அம்பயர்ஸ் கண்டிருக்கக்கூடும். அப்பிடி நடந்திருந்தால் என்ன செய்திருக்க வேணும்? அந்தப் பெடியனை வெளியில அனுப்பிட்டு இன்னொரு ஆளைப் போட்டு விளையாடச் சொல்லி இருக்கலாம். சரி, அதுக்குக்கூட மனம் வராட்டி அந்த மச்சை, பச்சை குத்தின பெடியனை ரீமில இருந்து நிப்பாட்டிப் போட்டு திரும்ப வைச்சிருக்க வேணும். ஆனால் அப்பிடியான மாற்றுத்திட்டங்களைப் பற்றி யோசிக்காமல், ஏதோ பிளான் போட்டுக் கலைச்ச மாதிரி ஒரு பெடியன் பச்சை குத்தினதை வைச்சு அந்த ரீமையே கலைக்கிறதால அதில விளையாடின மற்றப் பெடியளின்ர திறமையையெல்லோ அழிக்கிறீங்கள். அப்பிடி ஒராளுக்காக மிச்ச மாணவர்களின்ர திறமையை முடக்கவோ இப்பிடிப் போட்டியள் வைக்கினம்? உண்மையில அந்த பச்சை குத்தின பெடியனை இறக்கினது பிழை எண்டால், அதை முதலே கண்டுபிடிக்காமல் இருந்த அந்தப் போட்டிக்குப் பொறுப்பான ஆக்களிலையும் பெரும் பிழை இருக்கு. தங்கட பிழையை மறைக்க இப்பிடி ஒரு பள்ளிக்கூடத்தையே பழி வாங்கிறது நியாயமா? இன்னும் காலம் கடக்கேலை.

உடனடியா இதை உரியவை விசாரிச்சு, அந்தப் போட்டியை திரும்ப வைச்சு பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்வினமோ?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் மூடப்படுவது சாதாரணமான விடயம் அல்ல

## சைவ மகாசபையின் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜூன் 27**

**பிறப்பு வீதம் குறைவு, புலம்பெயர்வு ஆகியவற்றால் சனத்தொகை வீழ்ச்சி அடைந்து செல்லும் நிலையில் பல தமிழ்ப் பாடசாலைகள் வடக்கில் மூடப்படும் நிலை எழுந்துள்ளமை தொடர்பாகப் பலரும் சுட்டிகாட்டி வருகின்றனர். கிராமிய ஆரம்பப் பாடசாலைகள் மூடப்படுவதால் தமிழ்ச் சிறார்களின் ஆரம்பக் கல்வியை சந்திக்கப்போகும் இடர்பாடுகள் தொடர்பாக நீண்டகால நோக்கில் தமிழ்ச் சமுதாயம் சிந்திக்கவேண்டும்.**

- இவ்வாறு அகில இலங்கை சைவ மகாசபையின் பொதுச் செயலாளர் ப.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிறப்பு வீதத்தை அதிகரிக்க சகல வழிகளிலும் முயலவேண்டும். வசதி படைத்த சகலரும் கிராம ஏழைக் குடும்பங்களைத் தத்தெடுக்கவேண்டும். ஆரம்பக் கல்வி கட்டாயம் தாய்மொழியிலேயே கற்பிக்கப்படவேண்டும். அதீத அந்நிய மோகம், தவறான கல்வி வழிகாட்டல்கள் தவிர்க்கப்படவேண்டும். இவற்றைத் தற்போது ஆழமாகச் சிந்திக்கத் தவறின் இந்த மண்ணில் எமது இருப்பு சில தசாப்தங்களில் கேள்விக் குறியாகும். ஒவ்வொரு ஆலயமும், சமயப் பொது அமைப்புகளும் தமது ஊர் பாடசாலைப் பிள்ளைகளின் எண்ணிக்கை, கற்றல் செயற்பாடுகள், மாணவரின் போஷாக்கு நிலை, தமிழ் கணித அடைவு மட்டம், அறநெறிப் பங்கேற்பு என்பன தொடர்பாக அதீத கவனம் செலுத்தவேண்டும் - என்றார். (எ-66)

# திருட முற்பட்டவர் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டு ஒப்படைப்பு

வவுனியா, ஜூன் 27

வவுனியாவில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் வீடு புகுந்து திருட முற்பட்ட நபர் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வவுனியா, பத்தினியார் - மகிளங்குளத்தில் வீடொன்றில் இனந்தெரியாத நபர் உட்புகுந்து திருட முற்பட்டுள்ளார். வீட்டிலிருந்தவர்கள் கூச்சலிட்டுள்ளனர். அதனை அடுத்து குறித்த நபரைப் பொதுமக்கள் சுற்றி வளைத்து நையப்புடைத்துள்ளனர். பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அங்கு வந்த பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

குறித்தநபர் ஏற்கனவே பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் வவுனியா பொலிஸாரால் பல தடவைகள் கைது செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி3,18)



# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் 108 சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது. சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து சிறப்பு பூசை வழிபாட்டுடன் திருவிழா இனிதே நிறைவு பெறவுள்ளது. (ஒ-ரி3,17)

★ ★ ★

கொடிகாமம், ஜூன் 27

மிருசுவில் துர்க்காபுரம் அருள்மிகு ஸ்ரீ ஞான துர்க்கை அம்மன் தேவஸ்தான 33 ஆம் வருட மணவாளக்கோல தின சகஷ்ரகலச சங்காபிஷேகம் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 7 மணி முதல் நடைபெறவுள்ளது. (ஒ-ரி3,159)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

கொழும்புத்துறைமேற்கு பழனியாண்டவர் கோவிலின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. பத்து நாள்கள் உற்சவ காலங்கள் ஆகும். தினமும் மாலை 5 மணிக்கு சிறப்பு பூசைகள் ஆரம்பமாகி திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றது. எதிர்வரும் திங்கட்கிழமை காலையில் தீர்த்தத் திருவிழாவும் மாலை 6மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் இடம் பெறவுள்ளது. (ஒ-ரி3,17)



# பிளாஸ்ரிக் கழிவுகள் மீள்சுழற்சிக்காகக் கையளிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 27

பல வழிகளிலும் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் பெரும் தொகை பிளாஸ்ரிக் கழிவுப் பொருள்கள் கிராமங்களில் சேகரிக்கப்பட்டு, தெல்லிப்பழைப் பிரதேசசெயலகத்தினரால் மீள்சுழற்சிக்காக நேற்றையதினம் தெல்லிப்பழைப் பிரதேசசெயலரால் வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. (ஒ-ரி2, 66)

# பிரஜைகள் குழு தெரிவு

மன்னார் பிரஜைகள் குழுவின் புதிய ஆளுநர் சபை தெரிவு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் எம்.எஸ்.எம்.சபூர்தீன் (சிரேஷ்ட சட்டத்தரணி), அ.வில்பிரட் அர்ஜுன் (சிரேஷ்ட சட்டத்தரணி), அ.அன்ரன் றேமன்ஸ் குரூஸ் (தலைவர் இலங்கை தேசிய நிர்மாணிய சங்கம்), லோ.கொன்சால்வாஸ் கூஞ்ஞ (சிரேஷ்ட ஊடகவியலாளர்), கொ.தயாளராஜன் (அரச சார்பற்ற நிறுவன இணைப்பாளர்), ச.செசாரியஸ் பெர்னாண்டோ (ஓய்வுநிலை வங்கி முகாமையாளர்), அருட்பணி ச.மாக்கஸ் அடிகளார், திருமதி ச.றெஜினா இராமலிங்கம் (ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்), பி.றெஜி ஜெயபாலன் (அரச சார்பற்ற நிறுவன இணைப்பாளர்), அ.பத்திநாதன் குரூஸ் (ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்), அருட்பணி எ.டெஸ்மன் அஞ்சலோ அடிகளார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-ரி2,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். பிள்ளைகள் வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். சக வியாபாரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தாயின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான பிரச்சினை ஒன்று சுமுகமாகமுடியும். புதிய முயற்சிகளை யோசித்துத் தொடங்குவது நல்லது.

**கடகம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் கடன் வாங்காமல் சமாளித்துவிடுவீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும்.

**சிம்மம்:** மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளதால் பொறுமை அவசியம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். கணவன்- மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாகமுடியும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**துலாம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். அதன் காரணமாக கையிருப்புக் கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். நண்பர்கள் மூலம் ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**விருச்சிகம்:** தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** உற்சாகமான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். மற்றவர்களுடன் இணக்கமாக நடந்து கொள்வது அவசியம். வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே காணப்படும்.

**மகரம்:** எதிலும் சற்றுப் பொறுமையுடன் செயற்படவேண்டியநாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச் செல்லவும்.

**கும்பம்:** எதிலும் பொறுமைவேண்டும். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். திடீர் செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும். முக்கியமான முடிவுகளை யோசித்து எடுப்பது நல்லது.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். கடன்களைத் தந்து முடித்து நிம்மதியடைவீர்கள். பிள்ளைகளால் பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது.

# நிர்வாகக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

இலங்கைத் தாய்மொழி ஆசிரியர் சங்கத்தின் ஏழாவது நிர்வாகக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

சங்கத்தின் புதிய தலைவராக வடமராட்சிக் கல்வி வலயத்தை சேர்ந்த சு. யசீலன் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். (ஒ-ரி2,இ)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# புதைகுழிகளுக்குள் புதையும் உண்மைகள்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான வழக்குகளை அதிகம் கொண்ட நாடுகளில் உலகில் இரண்டாம் இடத்தில் இலங்கை பட்டியல்படுத்தப்பட்டுள்ளது. மிகச் சிறிய தீவில் பெரும் எண்ணிக்கையானோர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கான நீதி நிலைநாட்டப்படவில்லை. காணாமல் ஆக்கப்படுதலும் புதைகுழிகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுகின்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் கொல்லப்பட்டு புதைகுழிகளில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று பொதுவில் நம்பப்படுகின்றது. இலங்கையில் ஆட்சியாளர்கள் தங்களுக்கு எதிரான நபர்களை அல்லது குழுக்களை இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்குவதென்பது காலாதிகாலமாக நடந்து வருகின்றது.

மிகப்பெரிய புதைகுழிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரிநிற்கும் சிறிலங்காவிலுள்ள அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த காணாமல் போனவர்களின் குடும்பங்கள் கடந்த 22ஆம் திகதி கொழும்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தன. அந்த அறிக்கை மீது தமிழ்த் தரப்புக்கள் கூடிய கவனம் செலுத்தத் தவறியுள்ளன. இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டமைக்கு இன்றுவரையில் சான்றாகவுள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்துடன் நெருங்கிய தொடர்புள்ள இந்த விவகாரத்தை தமிழ் அரசியல் தரப்புகள் கண்டும் காணாமலும் இருப்பது தவறு.

அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் இலங்கையில் இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட மிகப் பிரதானமான 20 மனிதப் புதைகுழி அகழ்வுகள் இலங்கை ஆட்சியாளர்களின் அரசியல்விருப்பமின்மையால்எப்படி இடைநிறுத்தப்பட்டன அல்லது காணாமல் ஆக்கப்பட்டன – கைவிடப்பட்டன என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

2013இல் மாத்தளை மருத்துவமனைக்கு அருகிலிருந்த புதைகுழியிலிருந்து 155 சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டதையடுத்து, மாத்தளையிலிருந்து எண்பதுகளின் இறுதிப் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், தங்களது புதைகுழி வழக்கை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவிசெய்யுமாறு கோரப்பட்டதைத் தொடர்ந்தே மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இருப்பினும் தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு கைவிடப்பட்ட மன்னார் புதைகுழி உட்படப் பல்வேறு புதைகுழிகள் தொடர்பிலும் ஆராய்ந்திருக்கின்றது.

இந்த அறிக்கை தொடர்பில் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ள விடயம் கவனத்துக்குரியது.


'முப்பது ஆண்டுகள் கடந்த நிலையிலும் உண்மையைக் கண்டறிவதற்காகவும் நீதியைப் பெறுவதற்காகவும் நாங்கள் போராடிக்கொண்டிருக்க வேண்டிய நிலையே இருக்கின்றது மட்டுமன்றி, மீண்டும் இவை நிகழாது என்பதற்கான உத்தரவாதம் வெறும் மழுப்பலானதாகவே தொடர்ந்தும் இருக்கின்றது. மக்கள் விடுதலை முன்னணிக் காலத்தில் பெரும் அட்டூழியங்களில் ஈடுபட்ட கோத்தாபய ராஜபக்ச உட்பட்டவர்கள் உடனடியாகவே பொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தால், உள்நாட்டுப் போரில் நடந்த மிகப்பெரிய அட்டூழியங்களும், தண்டனை விலக்களிப்புகளும் தவிர்க்கப்பட்டிருக்கும். பொறுப்புக்கூறல் என்பது ஒரு விருப்பத்தெரிவான நடைமுறையல்ல மாறாக சிறிலங்காவின் அனைத்து மக்களதும் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு இது அவசியமானதாகும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

அவர் குறிப்பிட்டதைப்போன்று கோத்தாபய ராஜபக்ச மட்டுமல்ல இந்தத் தீவில் தமிழ் மக்களுக்கு எதிரான கலவரங்கள் ஆரம்பித்த 1956 ஆம் ஆண்டிலிருந்தே அதனைச் செய்தவர்கள், துணைபோனவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தால் இந்த நாட்டில் 30 ஆண்டு காலப் போர் நடந்திருப்பதற்கான வாய்ப்புகள் வெகுகுறைவு.

தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களைப் புரிவோர் – ஆட்சியாளர்களின் ஏவலாளிகளாக இருப்பதாலும், சிங்கள – பௌத்த கொள்கையின் அடிப்படையிலான இனப்படுகொலையைப் புரிவதற்காக தூண்டப்பட்டவர்களாக இருப்பதாலுமே அவர்கள் தண்டிக்கப்படவில்லை. இந்தப் போக்கே இன்றுவரையில் நீடிக்கின்றது. ஆட்சியாளர்களின் அரசியல் விருப்பமின்மையே பிரதான காரணம். அதில் மாற்றம் ஏற்படுத்தப்படாதவரையில் இந்தத் தீவில் மீண்டும் குருதிக்களரி ஏற்படுவதற்கான வாய்ப்பில்லை என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது.

## நாளொரு நல்வார்த்தை

"திட்டமிட்ட செயலைச் சிறப்பாகச் செய்யமுடியவில்லை என்றாலும் கூட, குறைந்தபட்சம்செய்து முடித்துவிடவேண்டும் என்பதில் உறுதியாக இருப்பேன்" – பில்கேட்ஸ்



# மாகாணசபைத் தேர்தல் அறிவிப்பு: இந்தியா எதிர்பார்க்கும் வெகுமதி

**கொழும்பு, ஜூன் 27**

**அடுத்த மாதம் இந்தியா செல்லவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதியை அவரது பயணத்துக்கு முன்னதாகவே இந்தியா எதிர்பார்க்கின்றது என்று அறியமுடிகின்றது.**

இந்தத் தகவல் இந்தியத் தரப்பால் பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்சவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே பஸில் ராஜபக்ச 'மொட்டு'வின் மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களை பத்திரமுல்லை காரியாலயத்துக்கு அழைத்து இது தொடர்பில் பேசியுள்ளார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு ரணிலுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவுள்ளது. அது தொடர்பான நிபந்தனைக்கு அவர் இந்தியா செல்லும் முன்பே உடன்படவேண்டிவரும். இந்தியா இதையே எதிர்பார்க்கின்றது என்று பஸில் கூறியுள்ளார். உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துவதற்குப் பணம் இல்லை என்றுகூறிவரும்ரணில்அரசு இதே காரணத்தை இந்தியாவிடம் கூறி மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா? என்ற கேள்வியும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது. (ஒ-22)

# பொதுவெளியில் கசிந்த பாதுகாப்பு ஏற்பாடுகள்!

## விசாரணைக்கு உத்தரவு



ஜனாதிபதியின் பாதுகாப்புத் தொடர்பிலான பொலிஸ் உள்ளகத் தகவல்கள் கசிந்துள்ளமை தொடர்பாக விசாரணைகளை ஆரம்பிக்கவேண்டும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுளார். ஜனாதிபதிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான பொலிஸ் உள்ளகத் தகவல்கள் சில தினங்களுக்கு முன்னர் வெளியாகியிருந்தன. கொலை முயற்சி நடக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஜனாதிபதிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று சமூக வலைத்தளங்களில் செய்திகள் பரவியிருந்தன. ஜனாதிபதி வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும் போதோ நாட்டுக்குத் திரும்பும்போதோ உரிய பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படுவது வழமை. அறிவுறுத்தல்களை ஊடகங்களுக்கோ அல்லது தனிநபர்களுக்கோ அனுமதியின்றி வழங்கக்கூடாது என்பது கண்டிப்பான நடைமுறை.

ஜனாதிபதியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாகத் தகவல்களை வெளியிட்டவர்கள் தொடர்பாக விசாரணை செய்து அவர்களை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். (எ-இ)



# 60 மருந்துகளின் விலை 16 வீதத்தால் குறைப்பு!

கொழும்பு, ஜூன் 27

நேற்றுமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் 60 வகை மருந்துகளின் விலை 16 வீதத்தால் குறைக்கப்படுகின்றது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 15 ஆம் திகதி சுகாதார அமைச்சரால் வெளியிடப்பட்டிருந்தது. எந்தவொரு மருந்து உற்பத்தியாளர், இறக்குமதியாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு தரப்பினரும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தப்பட்ட விலையில் மட்டுமே விற்பனை செய்யவேண்டும். பரசிட்டமோல், அமெக்சிலின், தைரோக்ஸின் மற்றும் கிளிபிசைட் உள்ளிட்ட 60 வகை அத்தியாவசிய மருந்துகளின் விலை திருத்தப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை 28.06.2023 புதன்கிழமை ஆனி 13

சுபநேரம் : 04.25 - 05.55
ராகுகாலம் : 11.55 - 01.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர்கள் தேவை

தனியார் உதிரிப்பாக
விற்பனை நிலையத்துக்கு
கணக்காளர்,
விற்பனையாளர்கள் தேவை.
(ஆண் / பெண்) (CS/51024) AH-1

**070 659 0123**

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள
கருவாட்டுக் கடைக்கு சிங்கள
மொழிபேசி வியாபாரம்
செய்யக்கூடிய மற்றும் சகல
வேலைகளும் செய்யக் கூடிய
வேலையாள்கள் தேவை.

**077 222 8312**

(CS/51009)AH-1

## கார்கள், வான்கள் வாடகைக்கு

கார்கள், வான்கள் நாள் / வார / மாத
வாடகைக்கு விடப்படும்.

**077 89 89 691**


# திருட்டுகளுடன்தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 27

சுன்னாகம் மற்றும் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் இரு சந்தேகநபர்கள் யாழ். காங்கேசன்துறை மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அளவெட்டிப் பகுதியில் பாடசாலை அதிபர் ஒருவரின் வீட்டினுள் புகுந்த திருடர்கள் சுமார் 5 லட்சம் பெறுமதியான இலத்திரனியல் பொருள்களைத் திருடிச் சென்றனர். சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் நிதர்ஷன் தலைமையிலான குழுவினர் நடத்திய விசாரணைகளில், அளவெட்டிப் பகுதியை சேர்ந்த 21 வயது மற்றும் 25 வயதான இரு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து திருடப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. அவர்கள் தெல்லிப்பழை பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்ட நிலையில், தெல்லிப்பழை பொலிஸார் நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் சுன்னாகம் மற்றும் தெல்லிப்பழைப் பகுதிகளில் இடம்பெற்ற திருட்டுக்களுடனும் சந்தேகநபர்கள் தொடர்புபட்டிருப்பது தெரியவந்தது. சந்தேகநபர்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர். (அ-ம-26)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலக சமுர்த்தி அபிவிருத்திக் கிளையில் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திரு.ச. ராதாகிருஷ்ணன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**கதிரவேற்பிள்ளை சபாரத்தினம்**

அவர்கள் கடந்த (24.06.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்



**பராசக்தி செந்திவேல்**

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பு - 15 ஐ வதிவிடமாகவும் கொண்ட பராசக்தி செந்திவேல் கடந்த (23.06.2023) அன்று காலமானார்.

அன்னார் கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், இராமலிங்கம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், செந்திவேல் அவர்களின் பாசமிகு மனைவியும், கோவிந்தராஜன், திருஅருள்செல்வன், கமலாராஜன், சசிகலா, ஜெனிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், லிங்கேஷ்வரி, கிருஷ்ணகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜனனி, அஸ்வினி, அஸ்வின் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், தர்மலிங்கம், மகேஸ்வரி, நாகேஸ்வரி, நடேசமூர்த்தி, சிவலிங்கம் லோகேஸ்வரி, புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சீதாலக்சுமி, பாலசுப்பிரமணியம், கணேசு, நவரட்ணம், செல்லம்மா, கனகம்மா, சின்னதுரை, சண்முகநாதன் தவமணிதேவி, யோகேஷ்வரி, ராசரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் லங்க மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (28.06.2023) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 598 2467**

(CR 40232) A-1


## வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனத்தில் பருத்தித்துறை, அச்சுவேலி, நெல்லியடி கிளைகளில் வேலை வாய்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. A/L மூன்று பாடங்களில் சித்தியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**முடிவுத் திகதி : 30.06.2023**

**தொடர்புகளுக்கு: 076 6675773**

(CS 25357) A-1


## பெயர்மாற்றம்

சிறுப்பிட்டி கிழக்கு நீர்வேலியில் வசிக்கும் **நன்னியன் குணத்தான்** ஆகிய நான் எனது பெயரை **நன்னியன் குணம்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **நன்னியன் குணம்** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

(CS/ 51019)AH-1

**- நன்னியன் குணம் -**

# சீரான வானிலை

வடமாகாணத்தில் இன்று சீரான வானிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல் மாகாணத்திலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ. க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது - என்றுள்ளது. (ம)



**அரியாலை வெட்டுக்குளம்**
**ஸ்ரீ புவனேஸ்வரி**
**அம்பாள் தேவஸ்தானம்**

**கைலாச வாகனத் திருவிழாவும்**
**வெள்ளோட்டமும்**

எம் பெருமாட்டிக்கு புதிதாக எம்மால் அமைக்கப்பட்ட கைலாசவாகன வெள்ளோட்டம் இன்று (27.06.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று தொடர்ந்து இரவு 7.00 மணிக்குப் புதிய கைலாச வாகனத்தில் எம் பெருமாட்டி வீதியுலா வந்து அடியவர்களுக்கு அருள் புரிவார்.

**6ஆம் திருவிழா கைலாச வாகன உபயகாரர்**
**திரு.நாகமுத்து பாலகிருஷ்ணன் குடும்பம்**
**பூமகன்வீதி, அரியாலை மேற்கு.**

(22387)AH-1

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 | 25 |
| 06 | 06 |
| 1945 | 2023 |



**திருமதி றஞ்சிற் இராஜலட்சுமி**

ஆலங்குளாய் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி றஞ்சிற் இராஜலட்சுமி அவர்கள் கடந்த (25.06.2023) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா, பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராஜேந்திரம் ஞானதேவி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற றஞ்சிற் அவர்களின் பாசமிகு மனைவியும், சோதிராசா, செல்வராசா, செல்வநாயகி, விஜயராஜா, சிவராசா, சகுந்தலாதேவி, சந்திராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், றஞ்சித்தாவின் அன்புத் தாயாரும், பிரதீப்பின் அன்பு மாமியும், அனிஷின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.06.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மதியம் 12.00 மணியளவில் கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆலங்குளாய்,
சண்டிலிப்பாய்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**தொடர்பிலக்கம்:**
**077 044 9425**

(CS 25358) A-1

ஓம்விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**பொன்ரதம்**
**விவேகானந்தன்**
**(சுமங்கலி)**

நினைவுநாள்
**27.06.2023**


பதின்மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்டன ஆனால் உங்களை மறக்க முடியவில்லை. ஒவ்வொரு நிகழ்வும் உங்களை நினைவுபடுத்துகின்றது.

**உங்கள் பிரிவால் வாடும்**
**கணவர் தி.விவேகானந்தன்,**
**சகோதர சகோதரிகள், சித்தி,**
**மைத்துனர்கள், பெறாமக்கள், மருமக்கள்.**

(CS/51020)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காட்சியும் விற்பனையும்



தென்மராட்சி பிரதேச கலாசார அலுவல்கள் அலகினால் பாரம்பரிய உணவு, உணவுப் பாதுகாப்பு பற்றிய அறிவைப் பரப்புதல் மற்றும் உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்தல் தொடர்பான உணவுப் பொருள் கண்காட்சியும் விற்பனையும் கடந்த 12ஆம் திகதி திங்கட்கிழமை பிரதேச செயலக முன்றிலில் நடத்தப்பட்டது. (ய-9)



குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை நிகழ்வு கடந்த 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ய-66)

# குருதிக்கொடை



கிளிநொச்சி மக்கள் வங்கியின் 62ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருதிக்கொடை நிகழ்வு கடந்த 17ஆம் திகதி சனிக்கிழமை வங்கி அலுவலகத்தில் இடம்பெற்றது. (ய-214)



# சுற்றுச்சூழல் பயிற்சிமுகாம்


வவுனியா சுற்றுச் சூழல் 'சீட்' அமைப்பின் ஏற்பாட்டில் சுற்றுச்சூழல் தொடர்பாக வவுனியாவில் கிராமிய மட்ட அமைப்புக்களுக்கான பயிற்சி முகாம் வவுனியா றோயல் ஹொட்டலில் கடந்த 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
பொலித்தீன் பாவனை கடல் மற்றும் குளங்கள் மாசடைதல் தொடர்பில் இந்த நிகழ்வில் ஆய்வு செய்யப்பட்டது. இதன் வளவாளராக சிங்கிலேயர் பீற்றர் கலந்துகொண்டார். (ய-60)

# உதவி வழங்கல்




பதுளை மாவட்டத்தில் பண்டாரவளை, பூனாகலை - கபரகலை ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட மண்சரிவால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் வசிக்கும் மாணவர்களுக்கு சீருடைகளும், பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான இரண்டு மாணவிகளுக்கு மடிக் கணினிகளும் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் கடந்த 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நேரடியாகச் சென்று அவர்களுக்கு வழங்கப்பட்டன. (ய-66)

# விழிப்புணர்வு



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு, ஒழுக்கம், கடமை, முறைப்பாட்டுப் பொறிமுறை மற்றும் போதைத் தடுப்புத் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு விழிப்புணர்வுக் கருத்துரைகளை வழங்கினர். (ய-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி - சந்திரசேகர வாரிவனநாதர் சிவன் கோவில் மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ய-9)



சாவகச்சேரி - கோயிற்குடியிருப்பு ஞானவீரபத்திரர் கோயில் அலங்காரத் திருவிழாவின் இறுதிநாள் உற்சவத்தில் சுவாமி நகர வீதியுலா வரும் காட்சி (ய-9)



அராலி மேற்கு நீலத்திக்காடு ஸ்ரீ பேச்சி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 20ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகியது. (ய-27)

## யோகா கற்கைநெறி

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப் பட்டு வரும் இலவச யோகக்கலைக் கற்கை நெறியின் புதிய பிரிவு நல்லூர் மங்கையர்க் கரசி வித்தியாலயத் தில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. (ய-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி, ஞாயிறு விடுமுறை கல்வி மேலும் பின்னடையும்

## மாவட்டச் செயலருக்கு வணிகர் கழகம் கடிதம்

ஏற்கனவே பின்னடைவை சந்தித்துள்ள கல்வியை வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமை தனியார் கல்வி நிறுவன விடுமுறைகளும் மேலும் பின்தள்ளச் செய்துவிடும் என்று யாழ். மாவட்டச் செயலருக்கு யாழ். வணிகர் கழகம் கடிதம் அனுப்பியுள்ளது. அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கொரோனா, பொருளாதார நெருக்கடி காரணமாக பாடத்திட்டங்களைப் பாடசாலைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யவில்லை என்றும் அவற்றை தனியார் கல்வி நிறுவனங்களே ஈடுசெய்கின்றன. தொழில் நிமித்தம் வேலைக்குச் செல்லும் பெற்றோர் பிள்ளைகளின் கல்விக்காக சனி, ஞாயிறு தினங்களையே தனியார் கல்வி நிலையங்களுக்கு கூட்டிச்செல்வது பொருத்தமாக அமையுமென கருதுகின்றனர்.

மாணவர்கள் மதவழிபாடு, அறநெறிக்குச் செல்வார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. பாடசாலை இடைவிலகிய மாணவர்களுடன் தனியார் கல்வி நிறுவன விடுமுறையால் விடுமுறை கிடைக்கும் மாணவர்களும் இணைந்து பாதிக்கப்படக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஏழை, நடுத்தர மாணவர்கள் பயன்பெறும் தனியார் பயிற்சிக்கல்வி வெள்ளி, ஞாயிறு தினங்களில் தடைசெய்யப்பட்டால் அவர்களுடைய கல்வி பாதிக்கப்படும். அதே வேளை வசதி படைத்த மாணவர்கள் தனிப்பட்ட வகுப்புகளுக்குச் சென்று பயனடைவர். பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களே தனியார் கல்வி நிலையங்களிலும் வகுப்புகளை நடத்துவதால் அவர்களுக்கு விடுமுறை நாள்கள் வசதியாக அமையும்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு அமைச்சரவையில் அப்போதிருந்த கல்வியமைச்சரால் வெள்ளி, ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புகள் தடைசெய்ய வேண்டுமென்ற தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது அமைச்சரவையில் எதிர்ப்புக் கிளம்பியதையடுத்து இந்த விடயம் கைவிடப்பட்டதாக நாம் அறிகிறோம். இலங்கையில் எந்த மாகாணத்திலும் இப்படியான நடைமுறைகள் இல்லாத போது நாம் மட்டும் இதை நடைமுறைப்படுத்துவது எமது மாகாணக் கல்விப்பின்னடைவுக்கு வழிவகுப்பதாக அமையும் என்று நாம் கருதுகிறோம். வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்வி நிறுவனங்களை தரம்-9 வரையில் மூடுவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறு கோருகிறோம் -என்றுள்ளது. (ஒ-5)

### திணைக்களங்களின்...

மேய்ச்சல் தரைக்குப் பொருத்தமான இடங்களும் விடுவிக்கப்படுவதற்கு அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய, 1985ஆம் ஆண்டுக்குப் பின்னர் குறித்த இரண்டு திணைக்களங்களினாலும் அடையாளப்படுத்தப்பட்ட காணிகளை விடுவிப்பதற்காக (1985ஆம் ஆண்டுக்கு முன்னைய நிலையைப் பேணுவதற்காக) துறைசார் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியால் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட வரைவுக்கே அமைச்சரவை நேற்று அங்கீகாரம் அளித்துள்ளது.

அதனடிப்படையில், வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் அமைச்சின் செயலாளர் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, 1985ஆம் ஆண்டு வரையில், குறித்த இரண்டு திணைக்களங்களினாலும் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த காணிகளை வரையறை செய்யும் செயற்பாடுகள் இந்த வருட இறுதிக்குள் நிறைவடைய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், எஞ்சிய காணிகள் அனைத்தையும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வடக்கு, கிழக்கு மற்றும் அண்டிய பிரதேசங்களில் யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்த நிலையில், காடுகளாக மாறிய பிரதேசங்கள் யுத்தம் நிறைவடைந்த பின்னர் குறித்த இரண்டுதிணைக்களங்களினாலும் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### சீனாவுக்குக்...

வன உயிரிகள் திணைக்களத்தின் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் குழு தாக்கல் செய்த ரிட் மனு, நேற்றுத் திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தபோது, வன உயிரிகள் திணைக்களத்தின் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மனோகர ஜயசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் வழக்கு அழைக்கப்பட்ட போதே இவ்வாறு உறுதியளிக்கப்பட்டது. (அ-ம)

### 20,000 கிலோ...

ஒட்டுமொத்தமாக சுமார் 20 ஆயிரம் கிலோ உயிர்கொல்லிப் போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஆண்டுதோறும் போதைப் பொருளுடன் தொடர்புடைய குற்றங்களுக்காகக் கைதுசெய்யப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. 2019 ஆம் ஆண்டு 89 ஆயிரத்து 321 பேரும், 2020ஆம் ஆண்டு 97 ஆயிரத்து 416 பேரும் போதைப்பொருள் குற்றங்களுக்காகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் பாவனையில் கொழும்பு முதலாமிடத்திலும், கம்பஹா, குருநாகல் மாவட்டங்கள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன. 2022 ஆம் ஆண்டு ஆயிரத்து 677 கிலோ 102 கிராம் ஹெரோய்னும், 17 ஆயிரத்து 607 கிலோ 422 கிராம் கஞ்சாவும், 283 கிலோ 873 கிராம் ஐஸும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தேசிய போதைப்பொருள் குற்றத் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ-ம)

# சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர்

## பேராசிரியர்களாகப் பதவியுயர்வு

யாழ். பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். பொறியியல், விவசாயம் மற்றும் இந்துக் கற்கைகள் ஆகிய பீடங்களைச் சேர்ந்த மூன்று சிரேஷ்ட விரிவுரையாளர்களே இவ்வாறு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். பல்கலைக் கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன் போது பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பொறியியல் பீடத்தின் மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி எம். கே.அகிலன் மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியல் துறையில் பேராசிரியராகவும், விவசாய பீடத்தின் விவசாய உயிரியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி க. பகீரதன் விவசாய உயிரியல் துறையில் பேராசிரியராகவும், இந்துக் கற்கைகள் பீடத்தின் இந்துநாகரிகத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி. விக்னேஸ்வரி பவநேசன், இந்துநாகரிகத் துறையில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (ரி2,20,26,27,66,125)



# புதிய தலைவர் தெரிவு

கொழும்பு, ஜூன் 27

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் முன்னைநாள் தலைவராகவிருந்த கே.பாலகிருஸ்ணன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தேசிய தலைமையகத்தின் தலைவராக கடந்த சனிக்கிழமை தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ஒ-ரி2-27)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 05 . 06 . 1938 | | 24 . 06 . 2023 |



## செல்லத்துரை அந்தோனிப்பிள்ளை

(மதி அண்ணா)

யாழ். குருசோ வீதி, சுண்டிக்குளியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை அந்தோனிப்பிள்ளை (மதி அண்ணா) 24.06.2023 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை சின்னத்தங்கச்சி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற தேவதாசனின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பஸ்தியாம்பிள்ளை எலிசபேத் தம்பதியரின் அன்பு மருமகனும், மக்டலின் நீற்றம்மா (சறோ) அவர்களின் அன்புக் கணவரும், கொலின் (கனடா), டானி (ஜேர்மனி), காலஞ்சென்ற லதன் றோய், சாமினி, யூட் (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சாந்தினி, சுதா, சுமதி, காலஞ்சென்ற அருள் அமுதன், நியோறின் ஆகியோரின் அன்பு மாமனாரும், மதுசங்கா, அரூசன், கிஷான், அக்சனா, நிறோஜினி, நிதர்சினி, நிசாந்தன், நிசாந்தினி, கனிஸ்ரா, அவிசன், ஆரோன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (27.06.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் யாழ். மரியன்னை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுத்து பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குருசோ வீதி,
சுண்டிக்குளி.

மகள் : 077 360 1635
மருமகள்: 076 9926 754

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25365) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. வாய்மூல அறிக்கைக்கு மக்கள் முன்னணி வரவேற்பு!

## அதன் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 27**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கைக்கு வரவேற்புத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அறிக்கையில் உள்ள சில விடயங்கள் தொடர்பாக அதிருப்தியும் வெளியிட்டுள்ளார்.**

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் உள்ள தனது இல்லத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

போர் முடிந்த பின்னர் சிறிலங்கா அரசு பொறுப்புக்கூறலை முன்னெடுக்கவில்லை. அந்த விடயத்தில் முன்னேற்றம் அடையவில்லை என்று தற்போதைய வாய்மூல அறிக்கை ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளது. பொறுப்புக்கூறலுக்கு முன்வராது நல்லிணக்கத்தையோ, நிரந்தர சமாதானத்தையோ ஏற்படுத்த முடியாது என்பதையும் இந்த அறிக்கை தெளிவாக எடுத்துரைத்துள்ளது.

இந்த அறிக்கையில் சில விடயங்கள் தொடர்பில் நாங்கள் அதிருப்தியடைந்துள்ளோம். தமிழ்மக்களுக்கெதிராக நடைபெற்றிருக்கின்ற பெரும் மனித குலத்துக்கெதிரான, சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் அனைத்துக்கும் சிறிலங்காவிலுள்ள சிங்கள - பௌத்தப்பேரினவாதத்தின் அரசியல் கொள்கை நிலைப்பாடே காரணம். இவ்வாறான சிங்கள - பௌத்த தேசியவாதத்தால் பிரதானமாக இலக்கு வைக்கப்பட்டு, இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் அடையாளம் இந்த அறிக்கையில் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை. அங்கீகரிக்கப்படவில்லை. இதை மிகப் பெரியதொரு குறைபாடாக நாங்கள் கருதுகிறோம் - என்றார். (எ-66)

## வீதியை ஆக்கிரமித்த வேலியே அகற்றப்பட்டது

### பிரதேசசபை செயலர் விளக்கம்

**கிளிநொச்சி, ஜூன் 27**

பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்குட்பட்ட தம்பகாமத்தில் தனிநபரின் காணிக்குள் அத்துமீறி நுழைந்த பிரதேசசபைப் பணியாளர் காணியில் அமைக்கப்பட்டிருந்த வேலிகளை பொலிஸாரின் உதவியோடு பிடுங்கி வீசியுள்ள குற்றச்சாட்டை மறுத்துள்ள பிரதேசசபைச்செயலர், வீதியை ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட வேலியையே அகற்றியதாகத் தெரிவித்துள்ளார்.

தம்பகாமத்தில் தனிநபர் ஒருவர் தனது உறுதிக் காணி எல்லையில் வேலிகள் அமைத்துக் கொண்டிருந்த வேளை திடீரென வந்த பளை பொலிஸார் மற்றும் பிரதேசசபை அலுவலகப் பணியாளர் ஆகியோர் காணி உரிமையாளர் கண்முன்னே வேலிகளைப் பிடுங்கி வீசியுள்ளனர். காணி உரிமையாளரால் ஏன் அகற்றுகிறீர்கள் என்று கேள்வி எழுப்பிய போதும் அவரது கேள்விகளுக்கும் எந்தப் பதிலும் யாரும் கூறாமல் வேலிகளை அகற்றியுள்ளனர் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் சபைச்செயலரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, பிரதேசசபைக்குரித்தானதாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள வீதிக்குக் குறுக்காக வேலி அமைக்கப்பட்டது. அதனை உப அலுவலகப் பரிசோதகரும், வருமான அதிகாரியும், சுகாதார ஊழியரும் இணைந்து அகற்றினர் - என்று பதிலளித்தார். (ஒ-113-125)

## சிங்களத் தலைவர்கள்

## தமிழர்கள் - சிங்களவர்கள் என இருவரையும் ஏமாற்றுகின்றார்கள்

### சிறிநேசன் குற்றச்சாட்டு

**மட்டக்களப்பு, ஜூன் 27**

சிங்களத் தலைவர்கள் தமிழ்ச் சமூகத்தினரை மாத்திரமல்லாமல் சிங்கள சமூகத்தினரையும், சர்வதேச சமூகத்தினரையும் ஏமாற்றுகின்ற நாடகங்களை அரங்கேற்றி வருகின்றனர் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜி.சிறிநேசன் குற்றம் சாட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் மூலமாகவே நாட்டை அபிவிருத்தி செய்யமுடியும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கவனத்திற்கொள்ள வேண்டும். சகல மக்களும் சமத்துவ உரிமையுடன் சுதந்திரத்துடன் வாழக்கூடிய நியாயமான தீர்வை ஜனாதிபதி வழங்கினால் நாடு விரைவில் அபிவிருத்தி அடையும்.

இதனை விடுத்து பொய்யான கருத்துகளை வெளிநாடுகளுக்குச் சென்று கூறுவதன் ஊடாக எதனையும் சாதிக்கமுடியாது என்பதை ஜனாதிபதி ரணிலிடம் கூறிவைக்க விரும்புகின்றோம் - என்றார். (ஒ-22)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிய உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டது

**யாழ்ப்பாணம், ஜூன் 27**

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்துடன் சாரதி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மருதங்கேணிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். எனினும் கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரம் மருதங்கேணிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி2-27)

## மீனவர்களது கருத்துகளை உள்வாங்காத உலக வங்கி!

### சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கண்டனம்

மீனவர்களின் கருத்துகளை உள்வாங்காது கடலட்டைப் பண்ணைகள் தொடர்பாக உலக வங்கி வெளியிட்ட அறிக்கைக்கு யாழ். மாவட்ட சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது.

அந்த அமைப்பின் இணைப்பாளர் சுபா தனுஜன் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:-

எமது வளங்களை அந்நிய சக்திகளுக்கு விற்கும் செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன. யாழ்ப்பாணக் கடற்கரைப் பரப்பில் அந்நியச் செலாவணியை மட்டும் கருத்திற்கொண்டு கடலட்டைப் பண்ணைகளை அமைப்பது முரணானது. புதிதாக நடைமுறைப்படுத்தும் எந்தத் திட்டமாக இருந்தாலும் அது ஏற்கனவே உள்ள மக்களின் வாழ்வாதாரத் தொழில்களைப் பாதிக்கக்கூடாது - என்றார். (எ-125)




## ரவிராஜின் ஜனன தினம் அனுஷ்டிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜின் 61ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு சாவகச்சேரியில் அமைந்துள்ள அன்னாரது உருவச் சிலைக்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மலர் மாலை அணிவித்து சுடரேற்றப்பட்டது. இந்த நிகழ்வில் அன்னாரின் பாரியார் சசிகலா, சமூகச் செயற்பாட்டாளர் க. அருந்தவபாலன், சே.தமிழமுதன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஒ-ரி3-159)

## வெற்றுக்காணி துப்புரவு

## மக்களிடையே குழப்பம்

**சாவகச்சேரி, ஜூன் 27**

நாவற்குழிப் பாலத்துக்கு அண்மையில் நீண்ட காலமாக வெற்றுக் காணியாக இருந்த 9 ஏக்கரை தனிநபர் ஒருவர் திடீரெனத் துப்புரவு செய்தமையால் அந்தப் பகுதி மக்களிடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது.

துப்புரவு செய்யப்பட்ட காணி அரச காணி என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இந்தக் காணியை இரு வாரங்களுக்கு முன்னர் தனிநபர் துப்புரவு செய்ய முயன்றபோது அங்கு சென்ற பொதுமக்கள் அதனைத் தடுத்து நிறுத்தியதுடன் பிரதேச சபைக்கும் தெரியப்படுத்தியிருந்தனர். பிரதேச சபையினர் தலையிட்டு துப்புரவு முயற்சியை நிறுத்தியிருந்தனர்.

இதன் பின்னர் கடந்த 23ஆம் திகதி அதே காணியை மீண்டும் தனிநபர் துப்புரவு செய்துள்ளார். இதனால் மக்கள் குழப்பமடைந்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் சாவகச்சேரி பிரதேசசபை செயலருடன் தொடர்புகொண்டு கேட்டபோது, காணி நீண்ட காலமாக வெறுமையாக இருந்தது.

காணிக்கான உறுதியை தனிநபர் ஒருவர் எம்மிடம் சமர்ப்பித்துள்ளார். அவரால் அது துப்புரவு செய்யப்படுகின்றது - என்றார். (ஒ-9-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலன்புரி...

அரசாங்கத்தின் நலன்புரித் திட்டங்களுக்குத் தகுதிபெற்றவர்களுக்கான பெயர்ப் பட்டியல் அண்மையில் வெளிவந்தது. இதில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டதாம் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ளோம் என்று தெரிவித்தே வவுனியாவில் நேற்று போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. விதவைகள், முதியோர்கள், சிறப்புத் தேவையுடையவர்களைக் கூட இந்தத் திட்டத்தில் புறக்கணித்து விட்டு, வெளிநாடுகளில் இருப்போரும் பணம் படைத்தோரும் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டினார்கள்.

வவுனியா பிரதேச செயலக வளாகத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் முறைப்பாடுகளை, வவுனியா பிரதேச செயலாளர் ந.கமலதாசன் நேரில்சென்று கேட்டறிந்ததுடன், அது தொடர்பில் தான் நீதியான விசாரணையொன்றை முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார். எனினும், அவருடைய கருத்தில் திருப்தியில்லை என்று தெரிவித்த மக்கள் தொடர்ந்து வீதிமறியல் போராட்டத்தை முன்னெடுத்தனர். அத்துடன், வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்துக்கு முன்பாகவும், வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகவும் வேறு இரு தரப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் போராட்டத்தில் ஈடுபட்ட மூன்று தரப்பினரும் ஏ-9 வீதியில் பண்டாரவன்னியன் சதுக்கம் முன்பாக ஒன்று கூடி வவுனியா - மன்னார் பிரதான வீதி மற்றும் ஏ-9 வீதி ஆகிய இரு பிரதான வீதிகளையும் மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டக்காரர்கள் வவுனியா மாவட்டச் செயலகத்துக்குள் நுழைந்ததையடுத்து வவுனியா மாவட்டச் செயலர் பீ.ஏ.சரத் சந்திர, அவர்களுடன் கலந்துரையாடி, வெளிவந்திருக்கும் பட்டியல் இறுதியானது அல்ல என்றும் முறைப்பாடுகளைப் பதிவுசெய்தால் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வாக்குறுதி வழங்கினார். கிராம அலுவலர் பிரிவுகளுக்கு மாவட்டச் செயலக அதிகாரிகள் வரும் போது அவர்களிடம் முறைப்பாடுகளைப் பதிவுசெய்யுமாறும், மாவட்டச் செயலக அலுவலர்களின் விஜயம் தொடர்பான விவரங்கள் பின்னர் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார். மாவட்டச்செயலரின் வாக்குறுதிகளை அடுத்து தற்காலிகமாகப் போராட்டம் கைவிடப்பட்டது.

இதேவேளை - அடுத்தடுத்த நாள்களில் இந்தப் போராட்டங்கள் மேலும் தீவிரமாகலாம் என்று கருதப்படுகின்றது. இதே வேளை நலன்புரி உதவித்திட்டத்தில் உள்வாங்கப்படாமையால் மன்னார், யாழ்ப்பாணம் உட்பட நாடெங்கும் பல இடங்களில் மக்கள் போராட்டங்களை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-110.18)

## எல்லே...

அந்தப் பாடசாலையின் மாணவர்களால் நேற்று ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:- பாடசாலைகளுக்கிடையிலான 'எல்லே' போட்டிகள் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்றன. குறித்த போட்டியில் பாரதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி மோதியது. இந்த ஆட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, பாரதி மகா வித்தியாலய அணி ஒரு கட்டத்தில் வென்றுவிடும் என்ற நிலை இருந்தது. இதன் போது அந்த அணியின் வீரர் ஒருவர் பச்சை குத்தியமைக்காக ஒட்டுமொத்த அணியும் தகுதி நீக்கம் செய்யப்பட்டு, எதிரணியான முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதை எதிர்த்தே பாதிக்கப்பட்ட பாடசாலையின் மாணவர்களால் நேற்றையதினம் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'எமது வெற்றியைப் பறிப்பதற்காகவே எமது அணியில் உள்ள வீரர் ஒருவர் பச்சை குத்தியுள்ளமையைக் காரணமாகக் கூறி எங்கள் அணியைத் தகுதி நீக்கம் செய்தனர். ஏற்கனவே இரண்டு போட்டிகளில் நாங்கள் விளையாடிய போது அதை அவதானிக்காதவர்கள் அரையிறுதியில் மட்டும் எவ்வாறு எங்களைத் தகுதி நீக்கம் செய்தனர்? பச்சை குத்தியது தவறு என்றால், அந்த வீரரைத் தகுதிநீக்கம் செய்துவிட்டு எங்கள் அணியை விளையாட அனுமதித்திருக்கலாம். எங்கள் அணியில் உள்ள மற்றைய வீரர்களின் விளையாட்டுத் திறமையை மழுங்கடிக்கும் வகையிலேயே இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், நியாயமான முறையில் நடுவர்கள் செயற்படவில்லை என்றும் நாங்கள் கருதுகின்றோம்' என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், காலை 6 மணிமுதல் போராட்டம் இடம்பெறுகின்றபோதிலும் நண்பகல் வரையில் வலயக் கல்விப் பணிப்பாளர் நேரில் வந்து தங்களின் பிரச்சினைத் தீர்த்துவைக்கவில்லை என்றும் மாணவர்கள் குற்றஞ்சாட்டினார்கள்.

இது தொடர்பில் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் உமாமகேஸ்வரனைத் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

இவ்வாறானதொரு ஆர்ப்பாட்டம் இடம் பெறுகின்றது என்றும், அதன் பின்னணி தொடர்பிலும் எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அந்த மாணவனை அணிக்குள் உள்ளீர்த்துக் கொண்டு சென்றமை பாடசாலையின் முதல்தவறு. ஆட்டம் நடைபெற முன்னர் மாணவர்களின் தகுதி தொடர்பான பரிசீலனைகள் இடம்பெற்றிருக்க வேண்டும் என்பதையும் மறுப்பதற்கில்லை. எனினும், இது விடயத்தில் முழுமையான அறிக்கையொன்றைக் கோரியுள்ளேன். அறிக்கை கிடைத்ததும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார்.

முல்லைத்தீவில் அதிகாரிகளின் அசண்டையீனத்தால் மாணவர்களில் விளையாட்டுத்திறன் பெருமளவு பாதிக்கப்பட்டு வருகின்றது. முன்னதாக கிரிக்கெட் அணியொன்று வயதுப் பிரிவுப் பிரச்சினையால் தகுதி நீக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## அமைச்சர்களின்...

தொடர்பில் இரண்டு இராஜாங்க அமைச்சர்களைத் தவிர அரசில் உள்ள வேறு எவரும் பேசுவதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடும் கவலையடைந்துள்ளார்.

இதனால் அரசின் முக்கியஸ்தர்கள் பலரை அழைத்து அண்மையில் இது பற்றி ஜனாதிபதி கலந்துரையாடியுள்ளார் என்று தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

'எல்லோரும் பிரச்சினைகள் பற்றியே பேசுகின்றார்கள். அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றியோ தீர்க்கப்பட்ட பிரச்சினைகள் பற்றியோ பேசுவதில்லை. இன்னும் சில மாதங்களில் தேர்தல் ஒன்றுக்குச் செல்ல வேண்டியுள்ளது. மக்களிடம் உண்மையைக் கூறாமல் இருந்தால் எப்படித் தேர்தலை எதிர்கொள்வது? அரசின் அபிவிருத்திகள் தொடர்பில் நான்தான் பேச வேண்டியுள்ளது' என்று கவலையுடன் ஜனாதிபதி பேசியுள்ளார் என்று அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (அ-ம-22)

## துணைவேந்தர்...

விசேட பேரவை அமர்வு எதிர்வரும் ஜூலை 12ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

நேற்றுமுன்தினம் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை 12ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள விசேட பேரவைக் கூட்டத்தில் வைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் நிபுணர் ஒருவரின் கண்காணிப்புடன் விண்ணப்பித்திருக்கும் மூவரினதும் கல்வித் தகைமை, அனுபவம், மற்றும் ஆளுமைத்திறன்களை மையப்படுத்தி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையில் வரையறுக்கப்பட்ட 7 வகைப் புள்ளித் திட்டத்தின்படி பேரவை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகப் புள்ளிகளையிடுவர்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பெறும் மொத்தப் புள்ளிகளின் படி திறமை அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களின் விவரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசியர் செ.கண்ணதாசன் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், சிரேஷ்ட பேராசிரியருமான தி.வேல்நம்பி ஆகியோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்தும், விலங்கியல்துறைப்பேராசிரியர்பி.வினோபாபா கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இருந்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளனர். (அ-ஒ.5.125,20)

## ராஜபக்சக்களை...

உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

'தனிநாடு கோரிப்போரிட்ட விடுதலைப்புலிகளை அழித்த பெருமை இராணுவத்தினரையே சாரும். இறுதிப் போருக்குத் தலைமை தாங்கியவன் என்ற ரீதியிலும், முன்னாள் இராணுவத் தளபதி என்ற ரீதியிலும் இதை வெளிப்படையாகக்கூற எனக்கு முழு உரித்து உண்டு. எனவே, 'போர் வெற்றி நாயகர்கள்' என்ற மகுடத்தைச் சூடிக்கொள்ள ராஜபக்சக்களுக்கு எந்த அருகதையும் கிடையாது.

போர் வெற்றியின் பின்னர், ஆட்சியில் இருந்த ராஜபக்சக்கள் தங்கள் சுகபோக அரசியலுக்காக இந்த நாட்டின் வளங்களை விற்று பொதுச்சொத்துக்களைக் கொள்ளையடித்து இறுதியில் நாட்டையே அழித்தனர். அவர்கள் செய்த இந்த மோசமான செயல்களையடுத்தே அவர்கள் கூண்டோடு அதிகாரத்திலிருந்து மக்களால் துரத்தியடிக்கப்பட்டார்கள். அதுமட்டும் போதாது. ராஜபக்சக்களைக் கூண்டோடு மக்கள் முன்னிலையில் தூக்கிலிட வேண்டும்.

பெரும் குற்றவாளிகளான ராஜபக்சக்களைப் பாதுகாக்கவே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேர்தல்களை நடத்த அஞ்சுகின்றார். தேசிய ரீதியில் தேர்தல் ஒன்று நடந்தால் ஐக்கிய மக்கள் சக்தியே ஆட்சிக்கு வரும். அது ராஜபக்சக்களுக்கும் தனக்கும் பாதகமாக அமையும் என்று ரணில் எண்ணுகின்றார்' - என்றார். (அ-ம-22)

## ஜூலை 10...

ரங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் இருந்தால், ஜூலை மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் மேன்முறையீடுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்ததாவது:-

அரசின் நலன்புரிக் கொடுப்பனவில் முறைப்பாடுகள் உள்ளவர்கள், அரசியல் தூண்டுதல்கள் அல்லது வெளி அழுத்தங்களுக்கு அடிபணியாமல் ஜூலை 10ஆம் திகதி வரையான மேன்முறையீட்டு காலத்துக்குள் பிரதேச செயலாளர்களைத் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

பொருளாதார உறுதித்தன்மை தேவைப்படும் நபர்களுக்கு உதவுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட அஸ்வெசும திட்டத்துக்கு அரசியல்சாயம் பூசி தமது அரசியல் தேவைகளை நிறைவேற்ற சில தரப்பினரின் முயற்சி மேற்கொள்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. தகுதியானவர்களைத் தெரிவு செய்வதில் குறைபாடுகள் இருப்பின் அது உடனடியாக நிவர்த்தி செய்யப்படும். இதுதொடர்பில் மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் சகல தரப்பினருடனும் கலந்துரையாடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள், பாதிக்கப்படக்கூடியவர்கள், ஏழைகள் மற்றும் மிகவும் ஏழ்மையானவர்கள் ஆகிய 4 சமூகப் பிரிவுகளின் கீழ், அஸ்வெசும நலன்புரி நன்மைகள் வழங்கப்படுவதுடன், ஊனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கு வழமை போன்று உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆகியோரும் இது தொடர்பில் தேவையான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன்படி, பொருளாதார ஒத்துழைப்பு தேவைப்படும் நபர் அல்லது குடும்பம் இந்த நன்மையை இழந்திருந்தால், இந்தக் காலப்பகுதியில் பிரதேச செயலகங்கள் ஊடாக மேன்முறையீடு செய்து அதனை சரி செய்வதற்கு வாய்ப்பு உள்ளது - என்றார். (அ-ம)

## எரிவாயு...

லிட்ரோ எரிவாயுவின் விலை படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையிலேயே தற்போது அடுத்தகட்ட விலைக்குறைப்புக்குத் திட்டமிடப்பட்டுள்ளது. புதிய விலைக்குறைப்பை ஜூலை முதல் நடைமுறைக்குக் கொண்டுவரவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எவ்வளவு தொகை விலைக்குறைப்பு இடம்பெறும் என்ற தகவல்கள் பின்னர் தெரிவிக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாக்நெர் படை கலகத்தால்

# கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 27
ரஷ்ய இராணுவத்துக்கு எதிராக, வாக்நெர் கூலிப்படை மேற்கொண்ட போர் அறிவிப்பை அடுத்து சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை சிறிது அதிகரித்துள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.
உலக சந்தைக்கு கச்சா எண்ணெய் விநியோகிக்கும் முக்கியமான நாடுகளில் ஒன்றாக ரஷ்யா இருப்பதால், வாக்நெர் கூலிப்படையின் கலகமே கச்சா எண்ணெயின் விலை அதிகரிப்புக்குக் காரணம் என்று கருதப்படுகின்றது.
எனினும், அடுத்த சில நாள்களில் கச்சா எண்ணெய் விலை இயல்பான நிலையை அடையும் என்றும், எரிபொருள் சந்தை வழக்கமான நிலைக்கு வரும் என்றும் வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம)

## கண்டாவளை கமநலசேவை நிலையத்தால் நீர்வரி பங்குகள் முறையற்று கையாடல்

கிளிநொச்சி - இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோக பயிர்ச்செய்கைக் கூட்டத் தீர்மானங் களுக்கு மாறாக உப்பாறு மற்றும் புலிங்க தேவன் முறிப்பு ஆகிய பகுதிகளிலிருந்து சுமார் 58.5 ஏக்கரில் 18 க்கு மேற்பட்ட நீர்வரி பங்குகள் முறையற்ற விதத்தில் கையாடல் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக விவசாயி களால் தெரிவிக்கப்படுகிறது.
சிறுபோகப் பயிர்செய்கை மேற்கொள்ளும் சகல விவசாயிகளதும் கமக்கார அமைப்புகளால் சமர்ப்பிக்கப்படும் உர மானியத்துக்கான பட்டியல்கள் காட்சிப்படுத்தப்பட வில்லை.
குறித்த பட்டியல்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டுதகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம்விண்ணப்பிக்கப்பட்டு பெறப்பட்ட தகவலில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.
நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக்குளத்தின்கீழ் இந்த ஆண்டுக்கான சிறுபோக பயிர்ச்செய்கைக் கூட்டம் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்றது. இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு முற்றிலும் மாறாக கண்டாவளை கமநலசேவை நிலையத்துக்கு உட்பட்ட புலிங்க தேவன் முறிப்பு மற்றும் உப்பாறு ஆகிய பகுதிகளுக்குரிய 25 க்கும் மேற்பட்ட நீர்வரிப்பங்குகள் உரிய முறையில் பங்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (சு-113)


**விற்பனை பிரதிநிதி தேவை**
யாழ்ப்பாணத்தில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு முன்அனுபவம் உள்ள விற்பனை பிரதிநிதி தேவை.
தொடர்புக்கு: 071 105 3077, 077 985 1946

**வேலையாள்கள் தேவை**
யாழ் நகரில் அமைந்துள்ள கேக் ஐசிங் கடை ஒன்றுக்கு கேக் ஐசிங் வேலையில் அனுபவமுள்ள பெண் வேலையாள்கள் தேவை.
(CS/51069) AH-1
077 015 2654

**BIZ FAIR - 2023**
Mega Sale
மக்கள் வங்கியின் ஏற்பாட்டில்
மங்களா தளபாட காட்சியறை
இன் 27ஆம் திகதி நம்பமுடியாத விலைக் கழிவில் இன்று மட்டும் பெற்றுக்கொள்ளலாம்.
தெரிவுக்கு முந்துங்கள்
இடம்: வீரசிங்கம் மண்டப வளாகம்
நேரம் : மு.ப. 9 மணிமுதல் பி.ப 4 மணிவரை
0777 286 069 / 077 254 3569
இன்று மட்டும்

**பெயர்மாற்றம்**
காளிகோவிலடி, கோண்டாவிலில் வதியும் **வயித்திலிங்கம் தசிகரன்** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **வயித்திலிங்கம் சசிகரன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **வயித்திலிங்கம் சசிகரன்** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.
(CS/ 51023)AH-1 - வயித்திலிங்கம் சசிகரன்-

**மணமகள் தேவை**
01. காரைநகர் - இடைக்காடு. இந்து கௌரவகுலம் (V). 1976. சுவாதி A/L, Divorce, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33580
02. கரம்பன் - சுருவில், Romancatholic, கௌரவகுலம் (V). 1973. Divorce, Canada Citizen, Logistics Coordinator மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33359
03. அராலி - நெடுந்தீவு . இந்து கௌரவகுலம் (V). 1979. சுவாதி. Bacholor of Computer Mathematies, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 30522
04. பளை. இந்து. கௌரவகுலம் (K). 1990. உத்திரட்டாதி. Electro Mechanical Engineering in Automation, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
05. இளவாலை. இந்து. கௌரவகுலம் (K). 1990. அத்தம். BSc, Sofware Engineer, Singapore மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 29439
06. Jaffna, Romancatholic, குருகுலம். 1989. மூலம். Master Degree, Engnineer, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 30117
07. பருத்தித்துறை - ஏழாலை. இந்து. குருகுலம். 1987. திருவாதிரை. BEng Power and Control Engineering, UK Citizen, அழகான மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Phone - 077 539 3728 Whatsapp - 077 803 8193

**சேவை நலன் பாராட்டு**
Congratulations

யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் உதவி ஆணையாளராகவும், பிரதி ஆணையாளராகவும் 04.12.2013 இல் இருந்து 21.06.2023 வரை தன்னலமற்ற அர்ப்பணிப்புமிக்க சேவையாற்றி கடந்த (22.06.2023) வியாழக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ள மதிப்பிற்குரிய
**திரு.இரத்தினகுமார் நிஷாந்தன்** அவர்களை
பாராட்டுவதோடு மேலும் பல பதவி உயர்வுகளையும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ இறைவனின் திருவருள் கிடைக்க வேண்டும் என பிரார்த்திப்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.
Best wishes
உத்தியோகத்தர்கள்,கமக்கார அமைப்புகள்
கமநல சேவைகள் நிலையம் - சாவகச்சேரி.
(CS/51026)AH-1

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
* பருத்தித்துறை வீதி. புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.
* ஒரு பரப்பின் விலை 200,000/= (இரண்டு லட்சம்) மட்டும்.
தொடர்பு:076 733 6047, 076 7558 606, 076 9119 371


**மரண அறிவித்தல்**

மலர்வு 11 . 06 . 1931



உதிர்வு 25 . 06 . 2023

**திருமதி குணசிங்கம் சிந்தாமணி**
(இளைப்பாறிய அதிபர்)

நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் 85/17 ஏ.வி வீதி அரியாலை, யாழ்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குணசிங்கம் சிந்தாமணி அவர்கள் 25.06.2023 இறைவனடி சேர்ந்துள்ளார்.
அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு குணசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னம்பலம், மீனாட்சிபிள்ளை அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்துக்குமாரு செங்கமலம் அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அபிராமிப்பிள்ளை அவர்களின் அன்புச் சகோதரியும், வையித்திலிங்கம் சங்கரப்பிள்ளை, காலஞ்சென்ற குமாரவேலு தங்கம்மா, காலஞ்சென்ற நடேசு ஆகியோரின் அன்பு மைத்துனியும், மங்கையர்க்கரசி (கனடா), இந்துமதி(கனடா), காலஞ்சென்ற லலிதாமதி, தேவராசன்(கனடா), இளங்குகராசன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் சண்முகசுந்தரம் ஹனிஸா, பானு அகியோரின் அன்பு மாமியாரும், தனராஜ், செந்தூர்றாஜ், தசலக்சன், பிரியதர்சன் விமலதர்சனா, பிரதீபா, சரண்யா, சசிறாஜ், ரமண்றாஜ், தனயன், தனுசன், தகயவன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், டிஷான், ஷகிரா, ஹர்சித், பிரிசன், ரோகித், ராணியா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.
அன்னாரின் ஈமக்கிரியைகள் 29.06.2023 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(CS 25362) A-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.